அங்கோலா



# பெருந்தொற்று காலத்தில் நம்பிக்கை

**இன்று புதிய மனுஷியாக மாறியிருக்கிறேன். எனக்குள்ளாக அந்த மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது.**

கோவிட் - 19 என் வாழ்க்கையை மாற்றியது. நான் தேவன் மேல் நம்பிக்கையுள்ளவன்தான். எனக்கு ஒரு நல்ல கணவன் வேண்டும் என்று சிறுவயது முதலே ஜெபித்து வந்திருக்கிறேன். தேவனை நேசிக்கிற, என்னோடு ஆலயத்திற்கு வருகிற ஒரு கணவன் கிடைக்கவேண்டும் என்று ஏங்கியிருக்கிறேன். ஆனாலும் எந்தச் சபைக்கு நாங்கள் செல்ல வேண்டும் என்பதில்தான் முடிவு தெரியாமல் இருந்தேன்.

சிறுவயதில், அங்கோலாவில் என் பெற்றோர் செல்கிற சபைக்குச் சென்றேன்; அங்குள்ள சடங்காச்சாரங்களின்படி எல்லாம் உண்மையோடு நடந்தேன். ஆனால் என்னிடம் ஏதோ குறை இருந்தது. ஓர் அருமையான கணவர் கிடைத்தார்; அதன்பிறகு வேறொரு சபைக்குச் செல்ல ஆரம்பித்தோம். நான்கு வருடங்கள் கழித்து, மூன்றாவதாக ஒருசபைக்குச்செல்லஆரம்பித்தேன். ஆனால் எனக்குள்ளாக வெறுமை காணப்பட்டது. ஏதோ ஒரு குறை இருந்ததை உணர்ந்தேன். அந்தச் சபையில் கேட்ட செய்திகள் எதுவுமே என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இல்லை. தேவன் என் பாவங்களை மன்னித்து விட்டாரா என்பதைகூட என்னால் தெளிவாக உணரமுடியவில்லை. என்னுடைய குணத்தை தம்முடைய சாயலில் மாற்றுகிறாரா இல்லையா என்று குழப்பத்தில் இருந்தேன். மேலும், என் கணவர் என்னோடு சேர்ந்து ஆலயத்திற்கு வரவில்லை.

2020ஆம் ஆண்டு, கோவிட்-19 காரணமாக, நாடு முழுவதிலும்

பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது. ஆலயங்கள் மூடப்பட்டன; ஆலய ஆராதனைகளில் கலந்துகொள்ள முடியவில்லை. யூட்யூப்பில் பிரசங் கங்களைக் கேட்பதற்காகத் தேடி னேன். ஹோப் தொலைக்காட்சி நிலையத்தில் இரண்டு செவந்த்-டே அட்வென்டிஸ்ட் போதகர்கள் பேசின பிரசங்கங்களைக் கேட்டேன்.

அந்தக் காணொளிகளைப் பார்த்தபோது, அவர்கள் சொன்ன ஒவ்வொரு வசனத்தையும் என்னு டைய வேதாகமத்தில் ஒப்பிட்டுப் பார்த்தேன். அப்போதுதான் என் னுடைய வேதாகம அறிவு மிகவும் குறைவாக இருந்ததை உணர்ந் தேன். ஏழாம் நாளில் ஓய்ந்திருக்க வேண்டும் என்று வேதாகமம் சொல் வது என் கவனத்தை மிகவும் ஈர்த் தது. பிரசங்கம்பண்ணிய போதகர் நேரடியாக என்னிடமே பேசியது போல இருந்தது. “நீங்கள் யாரைப் பின்பற்ற விரும்புகிறீர்கள்? மனி தர்களின் கட்டளைகளையா அல் லது வேதாகமத்தில் சொல்லப்பட் டுள்ள தேவனுடைய வார்த்தையை யா?” என்று கேட்டார்.

அந்தக் கேள்வி என் உள்ளத் தில் பெரும் தாக்கத்தை உண்டாக் கியது. தேவன் தம் வார்த்தையில் சொல்லியிருப்பதைப் பின்பற்றப் போகிறேன்” என்று என் ஆழத்தி லிருந்து கூறினேன்.

வீட்டைச் சுத்தம்செய்ய ஒரு பெண்ணை வேலைக்கு வைத்திருந் தேன்; அவளுடைய ஞாபகம் வந் தது. அவள் தினமும் வேலைக்கு வருவாள்; ஆனால் வெள்ளிக்கிழமை சாயங்கால வேளைகளிலும், சனிக் கிழமைகளிலும் வேலைக்கு வரமாட் டாள். சனிக்கிழமைகளில் செவந்த் -டே அட்வென்டிஸ்ட் திருச்சபைக் குச் செல்வதாகச் சொன்னாள். பிறகு சில நாட்கள் கழித்து, ஆலயம் செல் வதை நிறுத்திவிட்டாள்; சனிக்கிழ மைகளில் வீட்டிற்கு வேலைக்கு வர ஆரம்பித்தாள்.

ஓய்வுநாளின் முக்கியத்துவம் குறித்து உணர ஆரம்பித்ததும், அந்த வாலிபப் பெண்ணிடம் பேசினேன்.

“இப்போதெல்லாம் நீ ஆல யத்திற்குச் செல்வதில்லை. சனிக் கிழமைகளில் வீட்டு வேலைக்கு வருகிறாய். வேலை செய்வதற்காக ஆலயம் செல்வதை நிறுத்தியிருந் தால், நீ தாராளமாக ஆலயத்திற்கே செல்லலாம். இன்றுமுதல் நீ ஞாயிறு முதல் வெள்ளி வரை மட்டுமே வேலை செய்யவேண்டும். சனிக்கிழமை பரி சுத்த நாள்” என்று சொன்னேன்.

அந்தச் சமயத்தில் பெருந் தொற்று கட்டுப்பாடுகள் தகர்த்தப் பட்டன. அந்த வாலிபப்பெண்ணும் ஆலயத்திற்குச் செல்ல ஆரம்பித் தாள். இன்று ஞானஸ்நான ஆயத்த வகுப்புகளில் கலந்துகொண்டு வரு கிறாள்.

நானும் ஓய்வுநாள்பற்றி அதிக மாக அறிந்துகொள்ள விரும்பினேன். பிறகு ஆன்லைனில் ஓர் அட்வென் டிஸ்ட் போதகருடைய தொலைபேசி எண் கிடைத்தது; அவரைத் தொடர்பு கொண்டேன். அவர் அன்பாகப் பேசி னார். வாசிப்பதற்கு பல புத்தகங் களை அனுப்பி வைத்தார். ஓய்வு நாட்களில் ஆராதனைகளில் கலந்து கொண்டேன். 2021ம் ஆண்டு ஞானஸ் நானம் பெற்றேன்.

இன்று புதிய மனுஷியாக மாறியிருக்கிறேன். எனக்குள்ளாக அந்த மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. தேவன் என் பாவங்களை மன்னித்திருக்கிறார். அவர் தம்முடைய சாயலில் என்னுடைய குணத்தை மாற்றி வருகிறார். என் கணவரும் தேவனை அறிந்துகொள்ள வேண்டும்; என்னோடு சேர்ந்து ஆலயத்திற்கு வரவேண்டும். அதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

அன்டோனியா வாழும் அங்கோலா நாட்டில் நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்படும். அதாவது, பெலைஸ் நகரத்தில் ஓர் அட்வென்டிஸ்ட் ஆலயமும் ஓர் ஆரம்பப்பள்ளியும் கட்டவேண்டும்; லோம்பே நகரத்தில் வீட்டுவன்முறை மற்றும் ஆலோசனை மையம் அமைக்கவேண்டும்; ஹுவாம்போ நகரத்தில் உள்ள அங்கோலா அட்வென்டிஸ்ட் பல்கலைக் கழகத்தில் ஆடவர் விடுதி ஒன்று கட்டவேண்டும். அந்த நான்கு திட்டங்களில் இந்த மூன்றும் அடங்கும். நீங்கள் உதாரத்துவமாகக் கொடுப்பதற்காக நன்றி.

## கதைக் குறிப்புகள்

- யாராவது ஒருவர் இந்தச் சம்பவத்தை தன் சொந்த அனுபவம்போலச் சொல்லட்டும்.
- முகநூலிலிருந்து படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து தகவல் பதிவிறக்க: ***bit.ly/sid-2022.***
- அங்கோலாவில் பதின்மூன்றா வாரக் காணிக்கையின்மூலம் நான்கு திட்டங்கள் நிறைவேறப் போகின்றன; அது ஊழியப்பணி நோக்கம் எண் 4ஐ விளக்குகிறது: 'செவந்த்–டே அட்வென்டிஸ்ட் நிறுவனங்களின் சுதந்தரத்தையும், அனைத்தம்ச நலனையும், நம்பிக்கையையும் இயேசுவின்மூலம் பெலப்படுத்தவேண்டும்; தேவசாயலை மீண்டும் பெறச்செய்யவேண்டும்'.
- 1922ம் வருடத்தில்தான் அங்கோலாவுக்கு முதன்முதலாக நற்செய்தி பணியாளர் சென்றார். அவர் டபுள்யூ. எச். ஆண்டர்ஸன். ஆப்ரிக்காவில் பல இடங்களுக்குச் சென்று, அங்கோலாவில் ஊழியக்களத்தை நிறுவுவதற்காகச் சென்றார். அடுத்த வருடத்தில், டி. எம். ஃபிரெஞ்ச், ஜே.டி. பேக்கர் ஆகியோர் ஒரு மாதம் நாடுமுழுவதும் பயணம் செய்து, மத்திய பீட பூமியில் லெபி மாவட்டத்தில் ஓர் இடத்தைத் தேர்வுசெய்தார்கள். 1924ம் வருடத்தில் தென் அட்லாண்டிக் யுனைடெட் மிஷன்ஸ் ஸ்தாபிக்கப்பட்டது. 1928இல் அங்கோலா யூனியன் மிஷன் ஒழுங்கமைக்கப்பட்டது. 1924 முதல் 1933 வரை ஆண்டர்ஸன் அங்கு தலைவராக இருந்தார்.
- அங்கோலாவில் முதல் அட்வென்டிஸ்ட் வானொலி நிகழ்ச்சிகள் 1953ம் வருடம் ஒளிபரப்பப்பட்டன. 1963ம் வருடம், வாய்ஸ் ஆப் பிராஃபஸி நிகழ்ச்சிகள், ஆறு இடங்களிலிருந்து வாராவாரம் ஒளிபரப்பப்பட்டன.